முடிவை எடுத்து அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 39, திருமதி செ.சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

39—

கொளத்தூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

***9121—**திருமதி செ. சுந்தராம்பாள்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) மேட்டூர் தொகுதி, கொளத்தூர் பேரூராட்சியில், பேருந்து நிலையம் புதிதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நகர் ஊரமைப்பு இயக்குநரிடமிருந்து அனுமதி கிடைக்கப் பெற்றதும் பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மூடிய ஆலைகளை எல்லாம் திறந்து தொழிற்புரட்சி செய்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மேட்டூர் நகரத்தில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக மூடிக்கிடந்த 'The Madras Aluminium Company' என்ற கம்பெனியை 1-2-1995 அன்று திறந்து 1500 குடும்பங்களுக்கு வாழ்வு அளித்ததற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியினை அவர்களுடைய பொற்பாதங்களில் வணங்கிச் செலுத்துகின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொளத்தூர் பேரூராட்சியில், ஊரக வளர்ச்சித் துறையிடம் அனுமதி பெற்று இந்த ஆண்டே பேருந்து நிலையம் கட்டித்தர உறுதி அளித்துள்ளார்கள். அதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன். இந்த கொளத்தூர் பேரூராட்சி நகரமானது ஒரு நாளைக்கு 40-க்கும் மேற்பட்ட பேருந்துகள் வந்துசெல்லுகின்ற பேரூராட்சியாக இருக்கின்றது. இன்னும் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும் காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1995-ஆம் நிதி ஆண்டிலே ஊரக வளர்ச்சித் துறையிடம் அனுமதி பெற்று, பேருந்து நிலையம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 16]

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூர் பேரூராட்சியில் ஒருங்கிணைந்த நகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் ரூ.12 இலட்சத்து 65 ஆயிரம் திருத்திய மதிப்பீட்டில் உருவாக்குவதற்காக சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு இன்று நகர் ஊரமைப்பு இயக்குநருடைய பரிந்துரைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. திருத்திய மதிப்பீடு இன்றைய காலச் சூழ்நிலையிலே கூடுதலாக ஆகும் என்று எதிர்பார்க்கப்படுவதால், பொதுப்பணித்துறையினரை திருத்திய மதிப்பீடு தயாரித்துக் கொடுக்கும்படி அரசு கேட்டுக் கொண்டது. அதனால், திருத்திய மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் ஊரமைப்பு திட்டக் குழு கூட்டத்தில் இந்த பேருந்து நிலையம் கட்டப்படுகிற தீர்மானத்தை வைத்து, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டவுடன் கொளத்தூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 40, திரு. வி.ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

40—

பனைத் தொழிலாளர்களுக்கு சிறு தொழில் கூடம் தொடங்குதல்

*** 34372**—திரு வி. ரவிச்சந்திரன்:

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பனைத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக சிறு தொழில் கூடம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உப்பிலியாபுரத்தில் ஒரு ஆரம்ப பனைவெல்ல கூட்டுறவுச்சங்கம் செயல்பாட்டில் உள்ளது. எனவே, உப்பிலியாபுரம் தொகுதியில் பனைத் தொழிலாளர்களுக்கு என தனியே சிறு தொழிற் கூடம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]